©
தமிழ்நாடு அரசு
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 1.60 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 12] சென்னை, புதன்கிழமை, மார்ச் 31, 2010
பங்குனி 17, திருவள்ளுவர் ஆண்டு–2041

## பகுதி IV— பிரிவு 2 இன் இணைப்பு

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 22–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்டம் எண் 1/2010**

**1951–ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

**குறுந்தலைப்பும் தொடக்கமும்.**

**1.** (1) இந்தச்சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, 2009–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1–ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

**12–ஆம் பிரிவிற்கான திருத்தம்.**

தமிழ்நாடு சட்டம் XX/1951.

**2.** (இதன்பின்பு முதன்மைச் சட்டம் எனக் குறிப்பிடப்படுவதான) 1951–ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் சட்டத்தின் 12–ஆம் பிரிவில்,—

(1). (1)–ஆம் உட்பிரிவில், (a)–எனும் கூறில், "திங்களொன்றுக்கு மூவாயிரம் ரூபாய்கள்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "திங்களொன்றுக்கு எட்டாயிரம் ரூபாய்கள்" என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

(2). (4)–ஆம் உட்பிரிவிற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவானது அமைக்கப்படுதல் வேண்டும், அதாவது:—

(4) மாநில அரசால் செய்யப்பட்ட விதிகளால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டும், அத்தகைய கால அளவின்போதும்,–

(a) (1)–ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட உறுப்பினர் ஒவ்வொருவரும் மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினர்களும்;

(b) சட்டமன்றப் பேரவையின் அல்லது சட்டமன்ற மேலவையின் அல்லது இரண்டிலும் உறுப்பினராக இருந்து ஆனால் எந்த நேரத்திலும் அத்தகைய உறுப்பினராக இருப்பது அற்றுப்போன நிலையில் உள்ள நபர் ஒவ்வொருவரும் மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினர்களும்; மற்றும்

(c) சட்டமன்றப் பேரவையின் அல்லது சட்டமன்ற மேலவையின் அல்லது இரண்டிலும் உறுப்பினராக இருந்து, இறந்த உறுப்பினரின் குடும்ப உறுப்பினர்கள்;

மாநில அரசால் பேணப்பட்டு வருகிற மருத்துவமனைகளில் கட்டணமின்றி இலவசமாகத் தங்குவதோடு மருத்துவச் சிகிச்சை செய்துகொள்வதற்கும் கூட உரிமைத்தகுதி உடையவராதல் வேண்டும்.

(3). (4–E)–எனும் உட்பிரிவில் "திங்களொன்றுக்கு ஐந்தாயிரம் ரூபாய்கள்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக, "திங்களொன்றுக்கு இருபதாயிரம் ரூபாய்கள்" என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்.

12-B எனும் பிரிவிற்கான திருத்தம்.

**3.** முதன்மைச் சட்டத்தின் 12–B எனும் பிரிவில்,–

(1). (1)–ஆம் உட்பிரிவில்,–

(a) "திங்களொன்றுக்கு எட்டாயிரம் ரூபாய்கள்" என்னும் சொற்றொடருக்குப் பதிலாக "திங்களொன்றுக்கு பத்தாயிரம் ரூபாய்கள்" என்னும் சொற்றொடர் அமைக்கப்படுதல் வேண்டும்;

(b) இறுதியில் வருகின்ற "கால அளவு ஒன்று" என்னும் சொற்றொடரானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(c) இரண்டாம் வரம்புரையானது விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(2) <u>விளக்கம்</u> உள்ளடங்கலான (2-BB) எனும் உட்பிரிவும், (2-C) எனும் உட்பிரிவும் <u>விளக்கம்</u> உள்ளடங்கலான (2-CC) எனும் உட்பிரிவும் விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(3) விளக்கம்–I விட்டுவிடப்படுதல் வேண்டும்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

**தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2010–ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2–ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்றது; மற்றும் அது பொதுத் தகவலுக்காக இதன்மூலம் வெளியிடப்படுகிறது:—**

**சட்டம் எண் 10/2010**

**1939-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இந்தியக் குடியரசின் அறுபதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றப் பேரவையால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:—

1. (1) இந்தச் சட்டம், 2010–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டம் என வழங்கப்பெறும். குறுந்தலைப்பும் தொடக்கமும்.

(2) இது, 1993–ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 6-ஆம் நாளன்று நடைமுறைக்கு வந்துவிட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் X/1939.

2. 1939–ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின் 3-ஆம் பிரிவில், (7) ஆம் கூறில், (d) எனும் உட்கூறுக்குப் பதிலாக, பின்வருவது அமைக்கப்படுதல் வேண்டும்:— 3–ஆம் பிரிவிற்கான திருத்தம்.

"(d) வரி விதிக்கத்தக்க நேயச்சீட்டு எதனையும் பொறுத்த அளவில், 4-ஆம் பிரிவின் (1-A) எனும் உட்பிரிவின்படி செய்யப்பட்டுள்ளதாகக் கருதப்படும் செலுத்தம் எதுவும்,

ஆனால், 1955-ஆம் ஆண்டு தமிழ்நாடு திரையரங்குகள் முறைப்படுத்துதல் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் IX/1955) அவ்வப்போது அரசின் ஆணையின்மூலம் திரைப்படக் காட்சியின் உரிமைதாரர் வசூலிப்பதற்கு அனுமதிக்கப்பட்டு மேற்சொன்ன உரிமைதாரரால் வசூலிக்கப்பட்ட அத்தகைய பேணுகைக் கட்டணத்தை அது உள்ளடக்காது:

**வரம்புரை.**– ஆனால், அத்தகைய பேணுகைக் கட்டணமானது அனுமதிச் சீட்டுகளில் அச்சிடப்படுதல் வேண்டும்.".

தமிழ்நாடு சட்டம் 39/1995.
தமிழ்நாடு சட்டம் 38/2004.

3. 1995-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமும், 2004-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டத்தின் 2-ஆம் பிரிவும் இதன்மூலம் நீக்கம் செய்யப்படுகின்றன. நீக்கம்

தமிழ்நாடு சட்டம் X/1939.

4. 1993-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 6-ஆம் நாள் தொடங்கி 2010-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமானது வெளியிடப்படும் நாள் வரையிலான கால அளவின்போது மாநில அரசினால் வெளியிடப்படும் ஆணைகளுக்கு இணங்கிய வகையில், பேணுகைக் கட்டணமாக திரைப்படக் காட்சி உரிமைதாரர்களால் வசூலிக்கப்படும் தொகைகள் அனைத்தும், 1939-ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரிச் சட்டத்தின்படி செலுத்தத்தக்க வரித் தொகையைத் தீர்மானிக்கின்ற நோக்கத்திற்காக, அனுமதிக்கான செலுத்தத் தொகையில் சேர்க்கப்படுதல் கூடாது. காப்பு

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. தீனதயாளன்,**
*அரசுச் செயலாளர்,*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**ச. சந்திரசேகரன்,**
*இயக்குநர்,*
*தமிழ்ப் பிரிவு, சட்டத் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.